Tamil

# தலையீட்டு உத்தரவுகள்

**குறித்த**

**தகவல்கள்**

**Information**
**About**

# INTERVENTION ORDERS

# உள்ளடக்கம்

குடும்ப வன்முறை என்றால் என்ன? 3

தலையீட்டு உத்தரவு என்பது என்ன? 3

தலையீட்டு உத்தரவு ஒன்றைப் பெறுவது எப்படி? 4

காவல்துறையினரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் 4

காவல்துறையினர் உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்போது என்ன நடக்கும்? 5

நீதிமன்ற உத்தரவுகள் 5

விண்ணப்ப விசாரணைக்காக நீதிமன்றம் செல்லுதல் 7

தலையீட்டு உதிரவு வழங்கப்பட்ட பிறகு நடப்பதென்ன? 8

இதையடுத்து நிகழ்வது என்ன? 8

அடுத்த நபர் உத்தரவை மீறினால் என்ன நடக்கும்? 9

'குடும்ப நீதிமன்ற உத்தரவுகள்' என்றால் என்ன? 9

தலையீட்டு உத்தரவு ஒன்றை மாற்ற வேண்டிய தேவை எழும்போது
என்ன நடக்கும்? 10

உதவிக்காக யாரை அழைப்பது? 11

# குடும்ப வன்முறை என்றால் என்ன?

திருமணம், சேர்மானம், பழக்கம் போன்ற உறவுகளின் காரணமாகவும் , அல்லது குடும்பத்திலுள்ள வேறு தலைமுறை சேர்ந்த உறவுமுறைகளின் காரணமாகவும் சேர்ந்து வாழ்பவர்களிடையே ஒருவர் மீது இன்னொருவர் தொடர்ந்து ஏற்படுத்திவரும் துஷ்பிரயோக நடத்தைமுறை 'குடும்ப வன்முறை' (domestic violence) என்று சொல்லப்படுகிறது.

உடல்ரீதியான மற்றும் பால்ரீதியான வன்முறை, தூசன வார்த்தைப் பிரயோகம், அச்சுறுத்தல்கள், உணர்வு மற்றும் சமூக ரீதியான துஷ்ப்பிரயோகம், தீங்கிழைக்கும் நோக்கில் களவாய்ப் பின்தொடரல், பொருளாதார ரீதியான உரிமைப் பறிப்பு மற்றும் சொத்து சேதாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல வழிகளில் குடும்ப வன்முறை நிகழலாம். அனைத்து வகைப்பட்ட சமூகங்களிலும், அனைத்து வயதினரிடையேயும், மற்றும் அனைத்து கலாசாரத்தினரிடையேயும் குடும்ப வன்முறைகள் நிகழ்கின்றன.

குடும்ப வன்முறையானது சில வேளைகளில் குடும்ப துஷ்பிரயோகம் என்று சொல்லப்படுகிறது. எப் பெயர் சொல்லி அழைக்கப்பட்டாலும், இந்தத் துஷ்ப்பிரயோக நடத்தைகளை நமது சமூகம் ஏற்பதில்லை, மேலும் இப்படிப்பட்ட நடத்தைகளில் சில சட்டத்திற்குப் புறம்பானவை என்பதில் சந்தேகமில்லை.

குடும்ப வன்முறைக்கு பலியானவர்கள், அவர்களது பிள்ளைகள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் ஆகியோர் மீது இதனால் பெரும் சேதாரத் தாக்கம் ஏற்படுகிறது என்பதைத் சவுத் அவுஸ்திரேலிய காவல்துறை ஆமோதிக்கிறது. குடும்ப வன்முறைக்கு பலியானவர்கள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளது பாதுகாப்பிற்கும், அப்படிப்பட்ட பாதுகாப்பு தொடர்ந்து தரப்படவேண்டும் என்பதற்கும் காவல்துறை முந்துரிமை அளிக்கிறது, மேலும் இயலும் தருணங்களில் வன்முறைக்குக் காரணமாக இருப்பவர்களுக்குத் தண்டணை வழங்கவும் முயல்கிறது.

நீங்கள் குடும்ப வன்முறைக்குப் பலியானவர் என்றால், 'தலையீட்டு உத்தரவு' ('கட்டுப்படுத்தும் உத்தரவு' என்று முன்னர் இது அழைக்கப்பட்டது) ஒன்றினால் உங்களையும், உங்களது குடும்பத்தாரையும் பாதுகாக்க இயலும். தலையீட்டு உத்தரவு ஒன்றைப் பெறுவதற்காக காவல்துறையினரை நீங்கள் அணுகும்போது என்ன நடக்கும் என்பதை இந்த சிற்றேடு விளக்குகிறது. உங்களது கேள்விகளுக்கு இது விடையளிக்கும் என்றும், என்ன செய்வதென்று நீங்கள் முடிவு செய்ய இது உதவுமென்றும் நாங்கள் நம்புகிறோம்.

# தலையீட்டு உத்தரவு என்றால் என்ன?

உங்களுக்கு (பாதுகாக்கப்பட்ட நபருக்கு) எதிராக தொல்லை தரும், அச்சுறுத்தும் அல்லது துஷ்ப்பிரயோகத் தன்மையான அல்லது வன்முறைத்தனமாக இருக்கக்கூடிய நடத்தையில் ஈடுபடுவதிலிருந்து பிரதிவாதியைத் தடுப்பதற்காக காவல்துறை அல்லது நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்படும் உத்தரவு 'தலையீட்டு உத்தரவு' என்று அழைக்கப்படுகிறது. உங்களது வீட்டிற்கோ அல்லது நீங்கள் வேலை செய்யும் இடத்திற்கோ வருதல், உங்கள் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைக்குச் செல்லுதல், உங்களைப் பின்தொடர்தல் அல்லது கண்காணித்தல், உங்களைத் தொலைபேசியில் அழைத்தல் அல்லது உங்களுக்கு செய்திகள் அனுப்புதல் போன்ற பல காரியங்களைச் **செய்யக்கூடாது** என்று அடுத்த நபர் மீது உத்தரவு இடப்படலாம். அடுத்த நபர் உங்களுடன் ஒரு வீட்டில் பகிர்ந்து வாழ்ந்து வந்தால், அங்கிருந்து அவர் வெளியேற **வேண்டும்** என்பது போன்ற உத்தரவுகளும் அடுத்த நபர் மீது இடப்படலாம். உங்களையும், உங்களது சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்படலாம்.

**அடுத்த நபர் (பிரதிவாதி) இந்த உத்தரவை மீறினால் அது குற்றமாகும். உத்தரவு 'மீறல்' என்று இது அழைக்கப்படுகிறது. அடுத்த நபர் உத்தரவை மீறியிருக்கிறார் என்று நீங்கள் நம்பினால் இதை நீங்கள் காவல்துறையினரிடம் தெரிவிக்கவேண்டும்.**

# தலையீட்டு உத்தரவு ஒன்றைப் பெறுவது எப்படி?

தலையீட்டு உத்தரவுகள் காவல்துறையினரால் பிறப்பிக்கப்படலாம் (இடைக்கால தலையீட்டு உத்தரவு என்று இது அழைக்கப்படும்) அல்லது நீதிமன்றம் ஒன்றினால் இது பிறப்பிக்கப்படலாம். ஒவ்வொரு தருணத்திலும், உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கான காரணங்கள் இருக்கவேண்டும். உங்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் செய்யப்படும் தலையீடு எதுவும் இல்லையென்றால், அடுத்த நபரால் நீங்கள் துஷ்ப்பிரயோகத்திற்கு ஆட்படுத்தப்படுவீர்கள் என்று காவல்துறையினரோ அல்லது நீதிமன்றமோ கருதவேண்டியது அவசியம் என்பது இதன் பொருளாகும். துஷ்ப்பிரயோகம் என்ற வார்த்தைக்குப் பல உதாரணங்கள் உண்டு, எனவே உங்கள் சூழ்நிலை என்ன என்று அறிந்துகொண்ட பிறகு, தலையீட்டு உத்தரவிற்கான காரணமாக அது அமைகிறதா என்று காவல்துறையினரால் முடிவு செய்ய இயலும்.

தகுந்த காரணங்கள் இருந்தால், துஷ்பிரயோகத்தைக் கையாளும் நபர் மீது இடைக்கால தலையீட்டு உத்தரவு ஒன்றை நேரடியாகப் பிறப்பிக்கவோ, அல்லது உத்தரவு ஒன்றைப் பிறப்பிப்பதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்ய உங்களுக்கு உதவவோ காவல்துறையினர் முடிவு செய்வர். தலையீட்டு உத்தரவைப் பெறுவதற்காக எந்த முறை பயன்படுத்தப்படும் என்பதை சூழ்நிலைகள் தீர்மானிக்கும். இதற்காகக் கையாளப்படும் ஒவ்வொரு முறையும் இந்த சிற்றேட்டில் விளக்கப்பட்டுள்ளது. என்ன செய்யவேண்டும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக இந்த இரண்டு வழிமுறைகளையும் நீங்கள் வாசித்துப் பார்க்கவேண்டும்.

# காவல்துறையினரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள்

உங்களைத் தாக்குவது அல்லது உங்களது பொருட்களை உடைப்பது போன்ற குற்றச்செயல்களை ஒருவர் புரிந்துள்ள, அல்லது குற்றச்செயல்கள் உங்கள் மீது செய்யப்படும் என்று ஒருவர் உங்களை அச்சுறுத்தியிருக்கும் குடும்ப வன்முறை சம்பவம் ஒன்றின் போது காவல்துறையினர் நேரடியாக வந்திருக்கும் சமயத்தில், அந்த நபர் அவ்விடத்தில் இருந்தாலோ அல்லது காவல்துறையினர் வசம் காவலில் இருந்தாலோ, இடைக்கால தலையீட்டு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்து, செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்செயலை காவல்துறையினர் விசாரிக்கலாம்.

முதலில், நடந்தது என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு காவல்துறையினர் உங்களிடம் கதைப்பர். அடுத்த நபரால் உங்களுக்கும், உங்களது பிள்ளைகக்கும் ஏற்படும் அபாயக்கூறு எவ்வளவு என்பதை அவர்கள் மதிப்பீடு செய்வர். தலையீட்டு உத்தரவிற்கான காரணங்கள் இருக்கின்றன என்றும், ஏற்படும் ஆபத்திலிருந்து தலையீட்டு உத்தரவு உங்களைப் பாதுகாக்கும் என்றும் காவல்துறையினர் கருதினால், அச் சமயத்தில் அவர்கள் இடைக்கால உத்தரவு ஒன்றை எழுத்து மூலமாக ஏற்படுத்துவர். உங்களது பிள்ளைகளுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை இருந்தால், அவர்களும் இந்த உத்தரவில் உள்ளடக்கப்படுவர்.

செயல்முறையின் ஒரு பகுதியாக, என்ன நடந்தது என்பதையும், தலையீட்டு உத்தரவு உங்களுக்கு ஏன் தேவை என்பதையும் விளக்கும் வாக்குமூலம் ஒன்றை காவல்துறையினர் உங்களிடமிருந்து வேண்டுவர். குற்றச்செயல் (நீங்கள் தாக்கப்பட்டிருந்தால், அது போன்ற) குறித்த உங்களது வாக்குமூலம் ஒன்றை காவல்துறையினர் ஏற்கனவே பெற்றிருந்தால், அந்த வாக்குமூலத்தையே அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

காவல்துறையினருக்கு நீங்கள் தெரிவிக்கவேண்டிய இதர முக்கியமான விடயங்கள் இருக்கலாம். உதாரணமாக, அடுத்த நபரிடம் துப்பாக்கி இருக்கிறது என்று நீங்கள் எண்ணினால், காவல்துறையினருக்கு இதை நீங்கள் தெரிவிப்பதை உறுதி செய்யவேண்டும். ஏனெனில், தலையீட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், பிரதிவாதி வசம் இருக்கும் துப்பாக்கிகள் எதனையும் கைப்பற்றி காவல்துறையினர் அவற்றைக் காவல்நிலையத்தில் முடக்கி வைத்திருப்பர்.

'குடும்ப நீதிமன்ற உத்திரவு' எதுவும் இருக்கிறதா என்பதையும் நீங்கள் காவல்துறையினருக்குத் தெரிவிக்கவேண்டும். உங்களது 'குடும்ப நீதிமன்ற உத்தரவு'டன் உங்களது 'தலையீட்டு உத்தரவு'ம் இணைவாக செயல்படுவதைக் காவல்துறையினர் உறுதிப்படுத்த இது உதவும். உங்களது 'குடும்ப நீதிமன்ற உத்தர'வின் பிரதி ஒன்று உங்களிடமிருந்தால், காவல்துறையிருக்கு இதைக் கொடுப்பது உதவியாக இருக்கும். உங்களிடம் பிரதி இல்லையென்றால், 'குடும்ப சட்ட நீதிமன்ற'த்திடம் இருந்து காவல்துறையினரால் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்ள இயலும்.

# உத்தரவு ஒன்றை காவல்துறையினர் எழுத்து மூலமாகப் பிறப்பிக்கும் பொழுது என்ன நடக்கும்?

உத்தரவை எழுதி முடித்த பிறகு, அடுத்த நபருக்கு அதை விளக்கிச் சொல்லி, உத்தரவின் பிரதி ஒன்றையும் அவருக்குக் கொடுப்பதன் மூலம் அடுத்த நபருக்கு (பிரதிவாதிக்கு) உத்தரவைக் காவல்துறையினர் கொடுப்பர். தலையீட்டு உத்தரவின் பிரதி ஒன்று பிரதிவாதிக்குத் தரப்பட்ட அச்சமயத்திலிருந்தே காவல்துறையினரால் எழுத்து வடிவில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு பிரதிவாதி கட்டுப்பட்டாக வேண்டும்.

காவல்துறையினரால் ஏற்படுத்தப்பட்ட தலையீட்டு உத்தரவு உடனடியாக செயல்படத் துவங்கிவிடும்.

உத்தரவின் பிரதி ஒன்று உங்களுக்கும் தரப்படும். உண்மையில், பாதுகாக்கப்பட்டுள்ள நபராகக் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் பிரதி ஒன்று கொடுக்கப்படும், எனவே உங்களது பிள்ளைகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கும் பிரதிகள் தரப்படும், அல்லது அவர்கள் மிகவும் இளைய வயதினராக இருந்தால், அவர்களது பிரதிகளை நீங்கள் பெறுவீர்கள்.

காவல்துறையினரால் எழுத்து மூலமாகப் பிறப்பிக்கப்படும் உத்தரவானது, நீதிமன்றத்தில் பிரதிவாதி ஆஜராக வேண்டும் என்று வேண்டும் அறிவிப்பாகவும் அமையும். நீதிமன்ற விசாரணை நடைபெறும் நேரம், திகதி மற்றும் இடம் ஆகியவை இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். பொதுவாக, உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எட்டு நாட்களுக்குள் இது நடைபெறும். கிராமப்புறப் பகுதிகளில் நீதிமன்ற அமர்வுகள் அடிக்கடி இல்லாத காரணத்தினால் இப்பகுதிகளில் அதிக நாட்கள் ஆகலாம். இந்த முதல் நீதிமன்றத் திகதியன்று நீங்கள் செல்லவேண்டிய அவசியம் இல்லை.

இந்த விசாரணையின்போது நீதிமன்ற நடுவர் உத்தரவை மறுபரிசீலனை செய்வார், மேலும் உத்தரவிற்கு அவர் சம்மதித்தால், உத்தரவினை அவர் உறுதிப்படுத்தக்கூடும் (உத்தரவை நிரந்தரமாக இருத்த இயலும்), அல்லது அதை மாற்ற இயலும் (அதாவது உத்தரவின் நிபந்தனைகளை மாற்றி பிரதிவாதிக்கு அதை மீண்டும் சமர்ப்பிக்க இயலும்), அல்லது உத்தரவைத் தள்ளுபடி செய்ய (ரத்து செய்ய) இயலும்.

இந்த விசாரணையின் முடிவு என்ன என்பதை காவல்துறையைச் சேர்ந்த குற்றச்சாட்டு வழக்குரைஞரோ அல்லது காவல்துறை அதிகாரியோ உங்களுக்குத் தெரியப்படுத்துவார்.

# நீதிமன்ற உத்தரவுகள்

அவசரம் இல்லாத மற்ற சூழ்நிலைகளில், அல்லது அடுத்த நபர் அங்கு இல்லாத வேளைகளில், தலையீட்டு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டி நீதிமன்றத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இருந்தாலும், உங்கள் சார்பாக விண்ணப்பத்தினை ஆயத்தம் செய்து காவல்துறையினர் உங்களுக்கு உதவுவர்.

**இதற்குப் பொதுவான வழி நீங்கள் காவல்நிலையத்திற்குச் செல்வதுதான்; என்ன நடந்துள்ளது என்று உங்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகு, தலையீட்டு உத்தரவுக்கான போதிய காரணம் உங்களிடம் உள்ளதா என்பதை காவல்துறையினர் முடிவு செய்வர்.** போதிய காரணம் உங்களிடமிருந்தால், உங்களது சூழ்நிலைகளையும், தலையீட்டு உத்தரவு ஏன் தேவைப்படுகிறது என்பதையும் விளக்கும் வாக்குமூலம் ஒன்றை காவல்துறையினர் உங்களிடமிருந்து எடுப்பர்.

வாக்குமூலம் எடுப்பதற்கு சில மணித்தியால நேரம் ஆகலாம், எனவே இயன்றவரை ஆயத்தமாகவும், தெளிவாகவும் நீங்கள் இருக்கவேண்டும். நீங்கள் சொல்லும் விடயத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய சான்று அல்லது தகவல் எதனையும் உடன் எடுத்துச் செல்லுங்கள். கீழ் வருவன இவற்றுள் அடங்கலாம்:

- விடயங்கள் எங்கு எப்பொழுது நிகழ்ந்தன என்ற விபரம் உள்ளடங்க அடுத்த நபர் செய்து வரும் காரியங்களைப் பற்றி நீங்கள் எடுத்துவைத்திருக்கக் கூடிய குறிப்புகள்

- அடுத்த நபர் உங்களது சொத்திற்கு ஏற்படுத்தியிருக்கும் சேதாரத்தைக் காட்டக்கூடிய படங்கள் அல்லது இதர சான்றுகள்

- அடுத்த நபர் உங்களுக்கு அனுப்பியிருக்கக் கூடிய குறிப்புகள், கடிதங்கள், மின்னஞ்சல்கள் அல்லது தொலைபேசிச் செய்திகள் ஆகியவற்றின் பிரதிகள்

- மருத்துவர் ஒருவரை நீங்கள் பார்த்திருந்தால், மருத்துவம் சம்பந்தப்பட்ட தகவல்கள் அல்லது அறிக்கைகள்

- உங்களது பிள்ளைகளுக்குப் பொருந்திவரக் கூடிய ‘குடும்ப நீதிமன்ற உத்தரவுக’ளின் பிரதிகள்.

மீண்டும் நினைவூட்டுகிறோம், அடுத்த நபரிடம் துப்பாக்கி இருப்பதாக நீங்கள் நினைத்தால், காவல்துறையினரிடம் இதைத் தெரிவியுங்கள். தலையீட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், அடுத்த நபரிடமிருந்து (பிரதிவாதியிடமிருந்து) துப்பாக்கி அகற்றப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிடும்.

இயன்றால், நீங்கள் வாக்குமூலம் அளித்துக் கொண்டிருக்கும்போது தேவையற்ற அழுத்தத்திற்கு உங்கள் பிள்ளைகள் ஆளாகாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, உங்கள் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ள மாற்று ஏற்பாடுகளைச் செய்வது நல்ல யோசனை. உங்களது சூழ்நிலைகள் குறித்து காவல்துறயினரிடம் கதைப்பது உங்களுக்கு சிரமமாக இருக்கலாம் என்பதால் இது உங்கள் பிள்ளைகளுக்கும் அழுத்தத்தைக் கொடுக்கக்கூடும். இருந்தாலும், கவனிப்பிற்கான மாற்று ஏற்பாடுகள் கிடைக்கவில்லை என்றால், குழந்தைகளை நீங்கள் தாராளமாக உங்களுடன் காவல்நிலையத்திற்கு அழைத்து வரலாம்.

உங்களது வாக்குமூலம் முடிந்தவுடன், ‘காவல்துறை குற்ற நீதிப் பிரி’விற்கு அனுப்புவதற்காக ‘நீதிமன்ற கோப்பு’ ஒன்றைக் காவல்துறையினர் தயார் செய்வர். உங்களுக்காக நீதிமன்றம் உத்தரவைப் பிறப்பிப்பதற்கான போதிய காரணம் இருக்கிறதா என்று காவல்துறையைச் சேர்ந்த குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆய்வு செய்வர். அப்படி இருந்தால், காவல்துறையினர் உங்களுக்காக நீதிமன்றத்திற்கு வருவார்கள்.

## வழமையாக நீங்களும் நீதிமன்றத்திற்கு உடன் வருவீர்கள், இருந்தாலும் உங்கள் சார்பாக காவல்துறையினர் கதைப்பார்கள்.

நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் இடும்போது, யாருக்கு எதிராக தலையீட்டு உத்தரவு கேட்கிறீர்களோ அந்த நபர் உங்கள் விண்ணப்பம் விசாரிக்கப்படும்போது நீதிமன்றத்தில் இருக்கமாட்டார். வேறு ஏதாவது காரணத்திற்காக அவர் அங்கு வந்திருந்தாலும், அதன் காரணமாக நீங்கள் பாதுகாப்பாக இல்லாதது போல உணர்ந்தாலும் காவல்துறை அதிகாரி ஒருவருக்கோ அல்லது நீதிமன்றப் பணியாளர்களுக்கோ இதைத் தெரியப்படுத்துங்கள்.

# விண்ணப்ப விசாரணையின் போது நீதிமன்றம் செல்லுதல்

தலையீட்டு உத்தரவு ஒன்றை பிறப்பிக்கக் கோரி நீதிமன்றத்திற்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால், எந்த நீதிமன்றத்திற்குப் போவது என்பதையும், அதற்கான திகதி மற்றும் நேரத்தையும் காவல்துறையினர் உங்களுக்குத் தெரிவிப்பர்.

பாதுகாப்பு சோதனைகளை நேரத்தில் முடித்துக் கொள்வதற்காகவும், உங்களது விடயம் விசாரிக்கப்படும் நீதிமன்ற அறை எது என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும், சில நிமிடங்களுக்கு முன்னதாகவே நீங்கள் நீதிமன்றத்திற்கு வர வேண்டும். நீங்கள் எந்த நீதிமன்ற அறைக்குச் செல்ல வேண்டும் என்பதைத் 'தகவல் மேசை'யில் உள்ள ஊழியர்களால் சொல்ல இயலும்.

கால தாமதம் ஆகிக் கொண்டிருந்தாலோ அல்லது உங்களால் நீதிமன்றத்திற்குச் செல்ல இயலவில்லை என்றாலோ காவல்துறையினருக்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ தொலைபேசி மூலம் இதை முன்னதாகத் தெரிவித்து காரணத்தையும் சொல்லுங்கள்.

**பெருநகர** நீதிமன்றம் ஒன்றிற்கு நீங்கள் சென்றால், 'குடும்ப வன்முறை விசாரணைப் பிரி'வைச் சேர்ந்த காவல்துறை அதிகாரி ஒருவர் உங்களை சந்தித்துக் கதைப்பார். **கிராமப்பகுதி** நீதிமன்றம் ஒன்றிற்கு நீங்கள் சென்றால், காவல்துறையைச் சேர்ந்த குற்றச்சாட்டு வழக்குறைஞர் உங்களிடம் கதைப்பார்.

தலையீட்டு உத்தரவு வேண்டி விண்ணப்பம் இட்டுள்ள மற்றவர்களும் நீதிமன்றத்தில் இருக்கலாம், எனவே உங்களது விண்ணப்பம் கேட்கப்படும் வரைக்கும் நீதிமன்றத்திற்கு வெளியே காத்திருக்குமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். உங்களது அந்தரங்கத்தன்மையைப் பாதுகாப்பதற்காகவே இப்படி செய்யப்படுகிறது.

உங்களது விண்ணப்பம் கேட்கப்படும் நேரம் வரும்போது, நீதிமன்றத்திற்குள் வந்து பின்னிருக்கைகள் ஒன்றில் அமருமாறு நீதிமன்ற அலுவலர் ஒருவர் உங்களைக் கேட்பார். யாருக்கு எதிராக நீங்கள் தலையீட்டு உத்தரவு கேட்கிறீர்களோ அவரது பெயர் சொல்லப்படும்போது, உங்களது விண்ணப்பம் விசாரணைக்கு 'அழைக்கப்படுகிறது' என்று அர்த்தம். இது ஒரு நீதிமன்ற சம்பிரதாயமாகும், மற்றும் நீதிமன்ற நடுவர் உங்களது விண்ணப்பத்தைக் கேட்கத் தயாராக இருக்கிறார் என்பதை இது குறிக்கும்.

**நீங்கள் உங்கள் இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும். நீதிமன்ற நடுவர், நீதிமன்றப் பணியாளர்கள், அல்லது காவல்துறை அலுவலர் ஒருவரால் கேட்கப்பட்டாலொழிய இச்சமயத்தில் நீங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை.**

எதையாவது தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டிய தேவை நீதிமன்ற நடுவருக்கு இருந்தால், கேள்வி கேட்பதற்காக உங்களை சாட்சிக் கூண்டிற்குள் வந்து நிற்குமாறு அவர் உங்களைக் கேட்கலாம். இருந்தாலும், பின்புறம் உள்ள இருக்கையில் நீங்கள் அமர்ந்திருக்கும் போதே கேள்விகள் பெரும்பாலும் கேட்கப்படும், மற்றும் நீங்கள் இருக்கும் இடத்திலிருந்தே நீங்கள் பதிலளிக்கலாம். மேலதிக விபரம் தேவைப்பட்டால், காவல்துறை அதிகாரியும் உங்களைக் கேள்விகள் ஏதும் கேட்கலாம். நீங்கள் கேள்விகளைக் கவனமாகக் கேட்டு அவற்றிற்கு உண்மையாகப் பதிலளிக்க வேண்டும். நீதிமன்ற நடுவர் முடிவு எடுத்த பிறகு, தலையீட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதையும், அதன் நிபந்தனைகள் யாவை என்பதையும் அவர் உங்களுக்குச் சொல்வார்.

நீங்கள் எதையும் செவிமடுக்கத் தவறிவிட்டாலோ அல்லது எந்த விடயமாவது உங்களுக்கு விளங்கவில்லை என்றாலோ, குற்றச்சாட்டு வழக்குரைஞரையோ அல்லது குடும்ப வன்முறைக்கான காவல்துறை அதிகாரியையோ நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு நீங்கள் அது குறித்துக் கேட்கலாம். என்ன நடந்தது என்பதை அவர்கள் உங்களுக்கு விளக்கிச் சொல்வர், மேலும் உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால், இவற்றிற்கு அவர்கள் பதிலளிப்பர்.

# தலையீட்டு உத்தரவு ஒன்று வழங்கப்படும் பொழுது என்ன நடக்கும்?

காவல்துறையினரால் பிறப்பிக்கப்படும் தலையீட்டு உத்தரவைப் பொறுத்தவரை, 'பிரதிவாதி' என்று சொல்லப்படும் நபருக்கு காவல்துறை அதிகாரியால் **தலையீட்டு உத்தரவு தரப்பட்ட நேரத்திலிருந்தே இந்த உத்தரவு செயல்படத் துவங்கிவிடும்**. உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்பொழுது, **அடுத்த நபருக்கு (பிரதிவாதிக்கு) காவல்துறையினரால் உத்தரவின் பிரதி ஒன்று சட்டப்படி நேரடியாகத் தரப்படும் வரைக்கும் உத்தரவு செயல்படத் துவங்காது** என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியமாகும். அடுத்த நபருக்கு உத்தரவின் பிரதி ஒன்றைக் கூடிய சீக்கிரத்தில் சட்டப்படி தர காவல்துறையினர் முயன்றாலும், நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு இதற்கு சில நாட்கள் ஆகலாம்.

இயன்றால், காவல்துறையினர் அடுத்த நபருக்கு தலையீட்டு உத்தரவை தரப் போகிறார்கள் என்பதை அடுத்த நபருக்குச் சொல்லவேண்டாம், ஏனெனில் உத்தரவு சட்டப்படி தரப்படாத வகையில் அடுத்த நபர் காவல்துறையினரைத் தவிர்க்க முயலக்கூடும். இந்த நபரைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தால், அவர் வேலை செய்யும் இடத்தின் விலாசம், அவர் அடிக்கடிப் போகும் இடங்கள் ஆகியவற்றைக் காவல்துறையினருக்குத் தெரிவிப்பதன் மூலம் நீங்கள் உதவலாம்.

**சட்டப்படி தலையீட்டு உத்தரவு தரப்பட்டவுடன் காவல்துறையினர் இதை உங்களுக்கு அறியத்தருவர்**, இருப்பினும், உத்தரவு செயல்படத் துவங்கிவிட்டதா இல்லையா என்று உங்களுக்குக் கவலையாக இருந்தால், உங்களுக்கு அண்மையிலுள்ள காவல்நிலையத்தில் இது குறித்து நீங்கள் எவ்வேளையிலும் கேட்கலாம்.

உத்தரவு நீதிமன்றத்தால் வழங்கப்படும்பொழுது, தலையீட்டு உத்தரவின் **மூன்று பிரதிகளை** தபால் மூலமாகவோ அல்லது நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற தினத்திலிருந்து சில நாட்களுக்குப் பிறகு காவல்துறையினரிடம் இருந்தோ நீங்கள் பெறுவீர்கள். ஒரு பிரதியை பாதுகாப்பாக ஒரு இடத்திலும், இன்னொரு பிரதியை உங்கள் வசமும் (உங்களது கைப்பையிலோ அல்லது வாகனத்திலோ), மூன்றாவது பிரதியை அது தேவைப்படும் நபர் ஒருவரிடமும் (உதாரணமாக, நீங்கள் வேலை செய்யம் இடம் அல்லது உங்கள் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை) கொடுத்து வைத்திருப்பது நல்ல யோசனையாகும். தேவைப்பட்டால் நீங்கள் மேலதிகப் பிரதிகள் எடுத்து வைத்துக் கொள்ளலாம்.

உங்களது பிரதிகளை கவனமாக வாசித்துப் பார்த்து, அடுத்த நபரால் என்ன செய்ய இயலும், என்ன செய்ய இயலாது (நிபந்தனைகள்) என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால், நிபந்தனைகளை மீறும் வகையில் அடுத்த நபர் ஏதும் செய்கிறாரா என்று நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அப்படி ஏதும் நிகழ்ந்தால் நீங்கள் காவ்லதுறையினருடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

# அடுத்து நடப்பதென்ன?

உத்தரவில் **தரப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பிரதிவாதிக்கு உடன்பாடு இல்லையென்றால்,** அவர் நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய நாள் ஒன்று உத்தரவில் சொல்லப்பட்டிருக்கும். காவல்துறையினரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஆகிய இரண்டிற்கும் இது பொருந்தும். உடன்பாடு இல்லாத விடயங்கள் ஏதும் இருந்தால், அதற்குத் தீர்வு காண காவல்துறையினர் முயல்வர், மற்றும் உத்தரவில் மாற்றங்கள் எதுவும் செய்யப்பட்டால் அதை உங்களுக்கு அறியத்தருவர்.

இந்த நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு, அடுத்த நபர் உத்தரவிற்கு சம்மதிக்கவில்லை என்றால், நீதிமன்ற வழக்கு ஒன்று பிறகு நடக்கும். அச் சமயத்தில் நீதிமன்றத்திற்கு வருமாறு நீங்கள் கேட்கப்படலாம், மற்றும் உத்தரவு குறித்து சர்ச்சை எதுவும் இருந்தால் சாட்சி அளிக்க வேண்டிய தேவை உங்களுக்கு ஏற்படலாம். எச் சமயத்திலும், நீங்கள் நீதிமன்றத்தில் இருக்கும் அதே வேளையில் அடுத்த நபரும் நீதிமன்றத்தில் இருந்து அதன் காரணமாக உங்களுக்கு அச்சமாக இருந்தால், காவல்துறையினருக்கு இதைத் தெரிவியுங்கள். பாதுகாப்பாய் இருக்கிறோம் என்ற உணர்வை உங்களுக்கு ஏற்படுத்தத் தேவைப்படும் ஏற்பாடுகளைச் செய்ய அவர்கள் முயற்சிப்பர்.

நீதிமன்றத்தினால் மாற்றப்படும் வரைக்கும் அல்லது ரத்து செய்யப்படும் வரைக்கும் தலையீட்டு உத்தரவு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டியது முக்கியமாகும். தற்சமயம் உள்ள நிலை என்ன என்பது குறித்து உங்களுக்கு சந்தேகம் இருந்தால், புதிதாக ஏதும் நடந்துள்ளதா என்றும், அதற்கான விளக்கத்தையும் காவல்துறையினரிடம் கேளுங்கள். தலையீட்டு உத்தரவு எவ்வாறு செயல்படுகிறது என்பதையும், உங்களை அது எவ்வாறு பாதுகாக்கிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது உண்மையில் முக்கியமானதாகும்.

## அடுத்த நபர் உத்தரவை மீறினால் என்ன நடக்கும்?

உத்தரவில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதையாவது அடுத்த நபர் (பிரதிவாதி) முறித்தால், அது ‘உத்தரவு மீறல்’ என்று சொல்லப்படும். இது ஒரு குற்றச்செயலாகும், மற்றும் இதற்காக பிரதிவாதியின் மீது குற்றம் சாட்டப்படலாம்.

அடுத்த நபர் உத்தரவை **மீறும்** வகையில் எதையும் செய்யாமல் நீங்கள் சாக்கிரதையாக இருக்கவேண்டும். உதாரணத்திற்கு, உங்களுடன் தொடர்பு கொள்ள அடுத்த நபருக்கு அனுமதி இல்லாதபோது, நீங்கள் அவரைப் பார்க்கப் போகவோ அல்லது அவருடன் தொடர்பு கொள்ளவோ கூடாது.

உங்கள் முன்னிலையில் பிரதிவாதியால் தலையீட்டு உத்தரவு மீறப்படும்போதோ அல்லது ஆபத்தில் இருப்பதாக நீங்கள் அஞ்சும் போதோ 131 444 எனும் இலக்கத்தை நீங்கள் உடனடியாக அழைக்கவேண்டும் (அல்லது அவசரகாலத்தில் ‘000’ எனும் இலக்கத்தை அழையுங்கள்), உங்களுக்கு உதவ ரோந்து காவல் படையினர் அனுப்பப்படலாம்.

தலையீட்டு உத்தரவு மீறல் ஒன்று நடந்துள்ளது என்று நீங்கள் நினைத்தால், ஆனால் உடனடி ஆபத்தில் நீங்கள் இல்லாமல் இருந்தால், (உதாரணத்திற்கு, உத்தரவிற்கு மாறாக அடுத்த நபர் உங்களைத் தொலைபேசியில் அழைத்தால், காவல்துறையினர் அதை விசாரிக்க வேண்டும் என்பதற்காக **இதை நீங்கள் உங்களது உள்ளூர் காவல்நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.**

நினைவிருக்கட்டும், நீங்கள் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறீர்களோ அந்த அளவுக்குத்தான் உங்களது தலையீட்டு உத்தரவு பயனுள்ளதாக இருக்கும். மீறல்களை உடனடியாகத் தெரிவியுங்கள்.

## ‘குடும்ப நீதிமன்ற உத்தரவு’கள் குறித்து?

குழந்தைகள் சம்பந்தப்பட்டிருந்தால், ‘குடும்ப நீதிமன்ற உத்தரவு’க்காக குடும்ப நீதிமன்றத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டுமா என்பது குறித்து முடிவு செய்வதற்காக **சட்ட அறிவுரையை நாடுவது அவசியமாகலாம்.**

**தலையீட்டு உத்தரவில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை ‘குடும்ப நீதிமன்ற உத்தர’வில் உள்ள நிபந்தனைகள் ஒதுக்கித்தள்ளக் கூடும்** என்பதை நினைவில் கொள்வது முக்கியம். காவல்துறையினர் இதை உங்களுக்கு விளக்கிச் சொல்வர்.

# தலையீட்டு உத்தரவை மாற்றவேண்டிய தேவை ஏற்படும்போது என்ன நடக்கும்?

உங்களது சூழ்நிலைகள் மாறி, தலையீட்டு உத்தரவில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதனையும் மாற்றவோ (வேறுபடுத்த) அல்லது உத்தரவை ரத்து (தள்ளுபடி) செய்யவோ நீங்கள் விரும்பினால், காவல்துறையினருடன் தொடர்பு கொண்டு, உத்தரவை ஏன் மாற்ற விரும்புகிறீர்கள் என்பதற்கான காரணங்களை நீங்கள் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

- பெருநகர்ப் பகுதிகளில், 'குடும்ப வன்முறை விசாரணைப் பிரிவு'டன் தொடர்பு கொள்ளுங்கள்.
- கிராமப்புறப் பகுதிகளில், உள்ளூர் காவல்நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

உத்தரவு ஒன்றை மாற்ற வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டுமெனில், இன்னொரு நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். நீதிமன்றத்தால் மட்டுமே உத்தரவை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ இயலும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். உங்களாலும், மாற்றத்திற்கு ஒப்புக்கொள்ளும் அடுத்த நபராலும் மட்டுமே உங்களது உத்தரவு மாற்றப்பட இயலாது.

நீதிமன்ற விசாரணையின் திகதி மற்றும் நேரம் என்ன என்பது உங்களுக்கும் அடுத்த நபருக்கும் தெரியப்படுத்தப்படும். இந்த விசாரணையின்போது நீங்கள் நீதிமன்றத்திற்கு **வரவேண்டியிருக்கும்**. பெரும்பாலான சமயங்களில் அடுத்த நபரும் நீதிமன்றத்திற்கு வரவேண்டியிருக்கும், ஆனால் அனைத்து வேளைகளிலும் அல்ல.

**சில வேளைகளில் சூழ்நிலைகள் சுமுகமான நல்ல நிலைக்கு மாறும், எனவே உத்தரவுகளும் மாற வேண்டியிருக்கும் என்பதை காவல்துறையினரும் நீதிமன்றங்களும் அறிவர். இருப்பினும், நீங்கள் பத்திரமாக இருக்கிறீர்கள் என்பதிலும், உங்களையோ அல்லது உங்கள் குடும்பத்தாரையோ கூடுதலான ஆபத்தில் தள்ளக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்துமாறு உங்களுக்கு அழுத்தம் தரப்படவில்லை என்பதிலும் காவல்துறையினருக்கு திருப்தி ஏற்படவேண்டும்.**

**சிலவேளைகளில் உத்தரவில் மாற்றங்கள் ஏற்படுத்துவது அல்லது உத்தரவைத் தள்ளுபடி செய்வது போன்ற செயல்களால் உங்களுக்குள்ள ஆபத்து அதிகரிக்கும் என்றோ, அல்லது நீங்களும் உங்களது குடும்பமும் மேலும் குடும்ப வன்முறைக்கு ஆளாவீர்கள் என்றோ காவல்துறையினர் நினைத்தால், உத்தரவில் மாற்றம் செய்யவோ அல்லது உத்தரவைத் தள்ளுபடி செய்யவோ வேண்டி நீங்கள் விண்ணப்பிக்கும்பேது உங்களுக்காக நீதிமன்னத்திற்கு வர காவல்துறையினர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.**

# உதவிக்காக அழைக்க வேண்டிய இடங்கள்

அவசரகால சூழ்நிலை ஒன்றில் ‘000’

காவல்துறையினரது உதவி மற்றும் வருகைக்கு 131 444

பெருநகர்ப் பகுதிகளில், உங்களது உள்ளூர் ‘குடும்ப வன்முறை விசாரணைப் பிரிவு’டன் தொடர்பு கொள்ளுங்கள்:

| | | |
|---|---|---|
| அடிலெய்டு | 8172 5890 | வேலை நேரத்திற்குப் பிறகு 8172 5000 |
| எலிஸபெத் | 8207 9381 | வேலை நேரத்திற்குப் பிறகு 8207 9411 |
| ஹோல்டன் ஹில் | 8207 6150 | வேலை நேரத்திற்குப் பிறகு 8207 6000 |
| போர்ட் அடிலெய்டு | 8207 6413 | வேலை நேரத்திற்குப் பிறகு 8207 6444 |
| சவுத் கோஸ்ட் | 8392 9172 | வேலை நேரத்திற்குப் பிறகு 8392 9000 |
| ஸ்டர்ட் | 8207 4801 | வேலை நேரத்திற்குப் பிறகு 8207 4700 |

கிராமப்புறப் பகுதிகளில் உங்களது உள்ளூர் காவல்நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குடும்ப வன்முறைக்கு ஆளான ஆங்கிலம் பேசாத பின்புலத்தைச் சேர்ந்தவராக நீங்கள் இருந்து, தலையீட்டு உத்தரவு குறித்த செயல்முறையை விளங்கிக்கொள்வதில் உஙகளுக்கு உதவி தேவைப்பட்டால், **8346 9417** எனும் தொலைபேசி இலகக்கத்தில் **‘புலம்பெயர்ந்த மகளிருக்கான உதவி சேவை’ (மாநிலம் தழுவிய பற்கலாசார மற்றும் பன்மொழி குடும்ப வன்முறை சேவை) (Migrant Women’s Support Service [Statewide Culturally and Linguistically Diverse (CALD) Domestic Violence Service])-** யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குடும்ப வன்முறைக்கு பலியானவர் என்ற முறையில் உங்களுக்கு மேற்கொண்டு உதவக்கூடிய முகமைகளின் அட்டவணையை உங்களது உள்ளூர் காவல்நிலையத்திலிருந்து நீங்கள் பெறலாம்.

சவுத் அவுஸ்திரேலிய மாநில காவல்துறையினரது பொது சேவை முயற்சியால் இப் பிரசுரம் தயார் செய்யப்பட்டுள்ளது, மற்றும் இத் தயாரிப்பின் போது அனைத்துவித கவனமும் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் அல்லது அறிவுரை ஆகியவற்றின் துல்லியத்தன்மை, நடப்பு மற்றும் பொருத்தம் ஆகியவை குறித்து நேரடியான அல்லது மறைமுகமான உத்தரவாதம் எதுவும் இல்லை, மற்றும் இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அறிவுரை ஆகியவற்றைப் பயன்படுத்தியதன் காரணமாகவோ அல்லது அவற்றின் மீது நம்பிக்கை வைத்ததன் காரணமாகவோ யாரொருவருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்பிற்கு சவுத் அவுஸ்திரேலிய மாநில அரசோ, அதன் அங்கங்களோ, சவுத் அவுஸ்திரேலிய மாநில காவல்துறையோ மற்றும் அவர்களது முகவர்களோ, அலுவலர்களோ, மற்றும் பணியாளர்களோ எவ்விதமான பொறுப்பையோ அல்லது கடன்பாட்டையோ ஏற்க மாட்டார்கள்.

©South Australia Police

தலையீட்டு உத்தரவுகள் குறித்த தகவல்கள் அடங்கிய சவுத் அவுஸ்திரேலிய மாநில காவல்துறையினரது சிற்றேடு (மே மாதம் 2012 வெளியிடப்பட்டது) பிரசுரிமையால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

பிரசுரிமை மற்றும் இச் சிற்றேட்டின் பயன்பாடு குறித்த குறித்த விசாரணைகளைக் கீழ் வரும் அலுவலகம் வரவேற்கிறது:

**South Australia Police**
**Corporate Communication Branch**
**Police Headquarters**
**GPO Box 1539**
**Adelaide 5001**